**<u>சாதாரண கூட்டம்</u>**

**கூத்தாநல்லூர் நகராட்சியின் 2020ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 31ம் நாள் திங்கட்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு நடைபெற்ற சாதாரணக் நடவடிக்கைகள்**

| மன்றக்கூட்டம் நடைபெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்ற கூட்டப்பொருள் | மன்றத்தின் தீர்மானம் |
|---|---|---|
| 31.08.2020 | **பொருள் எண் 1**<br>நகராட்சி ஆணையர் அவர்களது ஜீலை 2020 மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது<br>அலுவலக குறிப்பு :- பதிவு செய்யலாம் (ந.க.எண். 2105/2011/சி1) | **தீர்மானம் எண்:-756**<br>**ஏற்கலாம்** |
| 31.08.2020 | **பொருள் எண் 2**<br>நகராட்சி பொறியாளர் அவர்களது ஜீலை 2020 மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது<br>அலுவலக குறிப்பு :- பதிவு செய்யலாம் (ந.க.எண். 2105/2011/சி1) | **தீர்மானம் எண்:- 757**<br>**ஏற்கலாம்** |
| 31.08.2020 | **பொருள் எண் 3**<br>இந்நகராட்சிக்கு உட்பட்ட பழைய நகராட்சி அலுவலகத்தில் உள்ள பழைய குளிரூட்டும் நான்கு சாதனங்களை எடுத்து புதிய நகராட்சி அலுவலகத்தில் பொருத்தவும் மற்றும் பழைய குளிரூட்டும் சாதனத்தில் உள்ள பழுதினை சீர் செய்யவும், Gas-fill Up செய்யவும் 14 எண்ணிக்கை AC சர்வீஸ் செய்யவும் ஆகும் உத்தேச தொகை ரூ.25,000/-க்கு அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. பொதுநிதியின் கீழ் மேற்கொள்ளலாம்.<br>(ந.க.எண். 0714/2020/இ1) | **தீர்மானம் எண்:- 758**<br>**அனுமதிக்கப்பட்டது** |
| 31.08.2020 | **பொருள் எண் 4**<br>இந்நகராட்சிக்கு உட்பட்ட புதிய நகராட்சி அலுவலக கட்டிடத்தில் பொறியாளர் பிரிவு, நகரமைப்பு பிரிவு, பொது சுகாதார பிரிவு மற்றும் பொதுப்பிரிவில் குளிர்சாதன பெட்டி பொருத்துவதற்கு தேவையான மின் உதிரிபாகங்கள் வாங்கிட ஆகும் உத்தேச தொகை ரூ.65,000/-க்கு அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. பொதுநிதியின் கீழ் மேற்கொள்ளலாம்.<br>(ந.க.எண். 0715/2020/இ1) | **தீர்மானம் எண்:- 759**<br>**அனுமதிக்கப்பட்டது** |

| | | |
|---|---|---|
| 31.08.2020 | **பொருள் எண் 5**<br>இந்நகராட்சியில் டெங்கு காய்ச்சல் தடுப்பு பணிகளுக்காக ஏற்கனவே 23 பணியாளர்கள் தனியாரிடமிருந்து ஒப்பந்தம் பெறப்பட்டு டெங்கு தடுப்பு நடவடிக்கை பணிகள் நடைபெற்று வருகிறது. இந்நிலையில் ஏற்கனவே இப்பணிக்காக இந்நகர் மன்ற தீர்மான எண் 475 நாள் 30.05.2019ல் ரூ.30,50,000/- (முப்பது லட்சத்து ஐம்பதாயிரத்திற்கு) மாவட்ட ஆட்சியர் திருவாரூர் அவர்களின் தினக்கூலி விலை விகித அடிப்படையில் மேற்படி 23 பணியாளர்களை பணி அமர்த்தி பணி மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டு தீ.கரன் சமூக தொண்டு நிறுவனம் மூலம் 01.07.2019 முதல் 30.06.2020 வரை பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் இந்நகர் மன்ற தீர்மான எண் 744 நாள் 30.06.2020ந் தேதிய மன்ற அனுமதியின்படி 01.07.2020 முதல் 31.08.2020 வரை மேற்படி நிறுவனத்திற்கு நீட்டிப்பு செய்யப்பட்டு டெங்கு பணிகள் நடைபெற்று வருகிறது. இந்நிலையில் எதிர்வரும் காலம் மழைக்காலமாக இருப்பதாலும், தற்போது கொரோனா தடுப்பு பணிகள் நடைபெற்று வருவதாலும், மேற்படி பணியினை 01.09.2020 முதல் 31.10.2020 வரை தீ-கரன் சமூக தொண்டு நிறுவனம் ஒப்பந்ததாரர் மூலமாகவே ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள ஒப்பந்தபுள்ளி விலை விகிதத்திலேயே டெங்கு பணிகளை மேற்கொள்ள உத்தேச செலவுத் தொகை ரூ.5,10,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>'அலுவலக குறிப்பு<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. அவசர அவசியம் கருதி பொது சுகாதார நலன் கருதியும் மேற்படி ஒப்பந்ததாரரிடம் அதே ஒப்பந்தபுள்ளியின்படி 01.09.2020 முதல் 31.10.2020 முடிய நீட்டிக்க மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண். 454/2019/எச்1) | **தீர்மானம் எண்:- 760**<br>**அனுமதிக்கப்பட்டது** |
| 31.08.2020 | **பொருள் எண் 6**<br>இந்நகராட்சி பகுதியில் திடக்கழிவு மேலாண்மை பணிக்காக 52 ஒப்பந்த தூய்மை பணியாளர்களை கொண்டு குப்பைகளை தரம் பிரித்து வாங்கும் பணி சமுதாய உரக்கிடங்குகள் அமைத்து உரம் தயாரிக்கும் பணிகள் மேற்கொள்ளப்படுகிறது. இப்பணிக்காக 01.07.2020 முதல் 31.08.2020 வரை இரண்டு மாத காலம் பணிக்காக இந்நகர் மன்ற தீர்மான எண் 743 நாள் 30.06.2020ல் ரூ. 11,30,000/-க்கு (பதினோரு லட்சத்து முப்பதாயிரம் ரூபாய் மட்டும்) அனுமதி பெறப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் செயல்முறைகளில் 52 தூய்மை பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் பெற்று சுகாதார பணிகள் நடத்திட அனுமதிக்கப்பட்ட மூன்றாண்டு காலம் 31.08.2020 உடன் முடிவடைந்து உள்ளது. எனவே மேற்படி பணிக்கு மூன்றான்டு கால அனுமதியினை நீட்டித்து வழங்கவும், கூடுதல் பணியாளர்களுக்கான அனுமதி கோரியும், மன்றத்தின் அனுமதி பெற்று நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு | **தீர்மானம் எண்:- 761**<br>**அனுமதிக்கப்பட்டது** |

| | | |
|---|---|---|
| | முன்மொழிவுகள் அனுப்பப்படவுள்ளது. மேலும் தற்போது திடக்கழிவு மேலாண்மை பணிகள் பார்த்து வரும் நிறுவனத்தின் அனுமதி காலம் 31.08.2020 உடன முடிவடைந்து உள்ளது. நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் அனுமதி பெற்றால் மட்டுமே புதிதாக ஒப்பந்தபுள்ளி கோர இயலும். எனவே தற்போது உள்ள சூழ்நிலையில் கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளவும், பொது சுகாதார அவசர அவசியம் கருதியும் 01.09.2020 முதல் 30.11.2020 வரை மூன்று மாத காலத்திற்கு மட்டும் ஏற்கனவே திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு 52 தூய்மை பணியாளர்களை வழங்கி வரும் அதே நிறுவனத்திற்கு பழைய ஒப்பந்தபுள்ளி விகிதத்திலேயே பணிகளை மேற்கொள்ள உத்தேச செலவின தொகை ரூ.20,35,320/-கடு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. அவசர அவசியம் கருதி பொது சுகாதார நலன் கருதியும் மேற்படி ஒப்பந்ததாரரிடம் அதே ஒப்பந்தபுள்ளியின்படி 01.09.2020 முதல் 30.11.2020 முடிய நீட்டிக்க மன்றம் அனுமதிக்கலாம். | |

| | | |
|---|---|---|
| 31.08.2020 | **பொருள் எண் 7**<br>இந்நகராட்சி பகுதிகளில் கொரோனா வைரஸ் தடுப்பு பணிகளுக்காக அவசர அவசியம் கருதி கீழ்குறிப்பிட்டுள்ள செலவினங்கள் துப்புரவு ஆய்வாளரால் செலவிடப்பட்டுள்ளது. எனவே அத்தொகையினை வழங்கிட கோரியுள்ளார். | **தீர்மானம் எண்:- 762**<br>**அனுமதிக்கப்பட்டது** |

| வ.எண். | நாள் | செலவின விபரம் | தொகை |
|---|---|---|---|
| 1 | 30.05.2020 | துப்புரவு பணியாளர்களுக்கான மருத்துவ முகாம் | 8725 |
| 2 | 23.06.2020 | முககக்கவசத்திற்கான அபராத ரசீது புத்தகம் 10 எண்ணம் | 1100 |
| 3 | 11.07.2020 | மருந்து தெளிப்பான இயந்திரம் பழுது நீக்கம் | 9540 |
| | | **மொத்தம்** | **19365** |

நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடிதத்தில் கொரோனா தடுப்பு நடவடிக்கைக்காக எந்த ஒரு பணிக்கும் ஒப்பந்த வழிமுறையினை பின்பற்றாமல் பணி மேற்கொள்ளலாம் என அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. மேற்படி கடிதத்தின் அடிப்படையில் மேற்படி குறிப்பிட்ட செலவினங்கள் அனைத்தும் துப்புரவு ஆய்வாளரால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனவே மேற்படி தொகை ரூ.19365/-ஐ துப்புரவு ஆய்வாளருக்கு வழங்கவும் மேலும் இனிவரும் காலங்களில் செய்யப்படும் இதர செலவினங்களுக்காகவும் மொத்தம் ரூ.50,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண், 335/2020/எச்1)

ஆணையர் / தனி அலுவலர்
கூத்தாநல்லூர் நகராட்சி